செ.வெ.எண்.613 நாள்.01.12.2017

**தமிழ்நாட்டில் முதன்முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கென ஒரு பகுதியை காஞ்சிபுரம் மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., துவக்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான அரசாணைகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் சிறப்பு பள்ளிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் விவரம் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக செயல்படும் பல்வேறு இணையதளங்கள் ஆகியன பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் இணையதளத்தில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் **Unicode** எழுத்துக்களில் **NVDA (Non Visual Desktop Application)** என்ற மென்பொருள் பதிவிறக்கம் செய்து கொண்டு தமிழில் விவரங்கள் அனைத்தும் பேசும் கணனி மூலம் கேட்டு தெரிந்து கொள்ளும் வகையிலும், பார்வை குறையுடைய மாற்றுத் திறனாளிகள் எழுத்துக்களை பெரிதாக்கி படிக்கும் மென்பொருளும் உள்ளது. மேற்காணும் இணையதளத்தில் மாற்றுத் திறனாளிகள் தங்களுக்கு தேவையான திட்டங்களுக்கான விண்ணப்ப படிவங்கள், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான அரசாணைகள் ஆகியன பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கல்வி உதவித் தொகை மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான ஸ்மார்ட் கார்டு, **PMEGP, UYEGP** சுயதொழில் வங்கி கடன் உதவி ஆகியன இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பிப்பதற்கான வசதிகளும் காஞ்சிபுரம் மாவட்ட இணையதளத்தில் **www.kanchi.nic.in – Departments – District Differently Abled Welfare Office (http://www.kanchi.nic.in/ddro.html)** என்ற பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி இணையதளத்தினை செல்பேசியிலும் பயன்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் இணையதளத்தினை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., அவர்களால் இன்று 1.12.2017 துவக்கி வைத்தார். பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளான செங்கல்பட்டு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.

ஜெயராஜ் மற்றும் செங்கல்பட்டு அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் திரு. நாகராஜ் ஆகியோர் இணையதளத்தினை பயன்படுத்தி செயல்முறை விளக்கமளித்தனர். திரு. ஜே. சேகர், தேசிய தகவலியல் மைய அலுவலர், காஞ்சிபுரம், திரு. ய.தே. ஸ்ரீநாத், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், செங்கல்பட்டு ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.